

பாடம் 13

ஜூன் 22 - 28

# கடைசி நாட்களில் இதயங்களைத் திருப்புதல்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *மல்கியா 4:5,6; மத்தேயு 11:14,15; 17:10; 1இராஜா 16:29-17:24; 1இராஜா 18:20-45; மத்தேயு 3:2.*

**மனன வசனம்:** இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்குமுன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான். மல்கியா 4:5,6.

பல்வேறு காலக்கட்டங்களைக் கொண்டது நம் வாழ்க்கை. சில காலங்கள் நன்றாக இருக்கும்; சில மோசமாக இருக்கும். சிலசமயம் குடும்பங்களில் ஒற்றுமை காணப்படும்; சிலசமயம் பிரிவு காணப்படும். தற்சமயம் எது எப்படி இருந்தாலும், தேவ வாக்குறுதிகளின் வெளிச்சத்தில் நாம் வாழவேண்டும், நம் முழு இருதயத்தோடும் முழு பெலத்தோடும் முழு ஆத்துமாவோடும் அவற்றைப் பற்றிக்கொள்ளவேண்டும். ஏனெனில், முடிவில் அவைதாம் நம் ஒரே நம்பிக்கை; மாநம்பிக்கை! தேவ வார்த்தையில் வாக்குறுதிகள் உள்ளன. நம் வாழ்வும் குடும்பமும் எந்தக் கட்டத்தில் இருந்தாலும், நாமும் நமக்குக் பிரியமானவர்களும் நம் குடும்பத்தினரும் அவற்றை உரிமைபாராட்டலாம்.

பல்வேறு சூழல்களின் பின்னணியில் ஒருசில வேதசம்பவங்களையும் வாக்குறுதிகளையும் அனுபவங்களையும் இந்த வாரம் பார்ப்போம். அவற்றில் நமக்கு பாடங்கள் இருக்கின்றன. நீங்கள் யாராக இருந்தாலும், எங்கு இருந்தாலும், வாழ்க்கை எந்தக் கட்டத்தில் இருந்தாலும் உங்களுக்கு போராட்டங்களும், பயமும், கவலைகளும் இருக்கும். ஆனால் நாம் தொழுகிற தேவனுக்கு எல்லாமே தெரியும். எல்லாவற்றிற்கும் மேலானவராகவும் அவர் இருக்கிறார்.

*2019, ஜூன் 29 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# திருப்பப்பட்ட இதயங்கள் பற்றின தீர்க்கதரிசனம்

**கேள்வி: எலியாவின் வருகைபற்றி மல்கியா 4:5,6 சொல்வதையும், அதுபற்றி புதிய ஏற்பாட்டு வசனங்கள் சொல்வதையும் ஒப்பிடுங்கள். மத் 11:14,15; 17:10; மாற்கு 6:15; லூக்கா 1:17.**

---

மல்கியாவின் நாட்களில் தேவன் "என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன்" என்று இஸ்ரவேலரிடம் மன்றாடினார்; அதற்கு அவர்கள் "நாங்கள் எந்த விஷயத்தில் திரும்பவேண்டும்?" என்று திமிராகக் கேட்டார்கள். மல்கியா 3:7. வாழ்க்கையைச் சீர்ப்படுத்த இன்னொரு வாய்ப்பு கொடுக்கப்படும் என்றார் தீர்க்கதரிசி. எலியாவின் சீர்திருத்தத்தால் இஸ்ரவேலர் மனந்திரும்பினார்கள். 1இராஜா 18:37. அதை நினைவுகூர்ந்து, 'பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்பும்படி' அவர் மறுபடியும் வரப்போவதாக மல்கியா தீர்க்கதரிசனம் சொன்னார். மல்கியா 4:6.

எனவே, மேசியாவின் வருகையை அறிவிக்கும்படி எலியாவே வரப்போவதாக யூதர்கள் மத்தியில் பேச்சு எழுந்தது. (ஒப்பிடவும்: மத்தேயு 17:10; மாற்கு 6:15). ஆனால் யோவான் ஸ்நானன்தான் இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலென புதிய ஏற்பாடு சொல்கிறது. மத் 11:14,15; லூக்கா 1:17.

**கேள்வி: இருதயத்தைத் திருப்புதல் என்பதை எவ்வாறு பொருத்திப் பார்க்கலாம்?**

- இஸ்ரவேல் மக்கள் ஆண்டவரோடு மீண்டும் ஒப்புரவாவதை. ஏசாயா 63:16.
- தேவன் ஒரு பிதாவாக தம் பிள்ளைகளின் மீதான கோபத்திலிருந்து திரும்பி (மீகா 7:18,19), தம்மிடம் வருமாறு தம் மக்களை அழைப்பதை. ஏசா 44:22; மல்கியா 3:7.
- உடன்படிக்கையைப் புதுப்பிப்பதன்மூலம் உண்மையுள்ள தங்கள் முன்சந்ததியாரைப் போல பின்சந்ததியார் மாறுவதை. அந்த முன்சந்ததியாரின் விசுவாசத்தில் நடக்கும்படி பழைய ஏற்பாட்டில் மீண்டும் மீண்டும் அழைப்பு கொடுக்கப்படுகிறது. உடன்படிக்கைக்கு உண்மையோடு வாழ்வதைச் சார்ந்துதான் அவர்களுடைய தேசத்தின் ஆசீர்வாதம் இருந்தது. உபா 4:29-31.
- குடும்பஉறவுகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, சீராவதை. தேவஉடன்படிக்கைக்கு உண்மையாக இருப்பது, பெற்றோர் - பிள்ளை உறவில் வெளிப்படுகிறது. பெற்றோரும் பிள்ளைகளும் தங்கள் பொறுப்புகளை உண்மையோடு நிறைவேற்றும்போதுதான் அவர்கள் பூமியில் வாழ்ந்து, தேவ ஆசீர்வாதத்தைப் பெறமுடியும். நீதிமொழிகள் 2:21.

தேவனோடு உறவைப் புதுப்பிப்பதற்கும், நம் குடும்பத்தினரோடு உறவைப் புதுப்பிப்பதற்கும் உள்ள தொடர்பு என்ன? இதில் எது முதலில் நடக்கவேண்டும்?

# குடும்பம் மீண்டும் இணைதல்

**கேள்வி:** எ

ஆகாப் ராஜாவின் சீதோனிய மனைவியாகிய யேசபேல் இஸ்ரவேல் தேசத்தில் பாகால் தொழுகையைப் புகுத்தினாள்; அது ஒழுக்க சீர்கேட்டிற்கு வழிநடத்தியது. திருமணம், குடும்பம், பாலுறவு பற்றிய உயர்வான கருத்துகளை தேவன் சொல்லியிருந்தார். ஆனால் முறைதகா பாலுறவும், விபசாரமும், பிற பாலியல் வக்கிரங்களும் அப்போதனைகளை மறைத்தன. 'தொழுகை யாருக்கு?' என்கிற நிலை உருவானது. 'யேகோவா என் தேவன்' என்று தன் பெயரிலேயே வைத்திருந்த எலியா, பாகால் தொழுகையைக் கண்டிக்கிறார்.

**கேள்வி: அஞ்ஞான நம்பிக்கைகளை விரட்டியடித்து, குடும்பங்களில் புது வாழ்வைக் கொண்டுவந்த எலியாவின் அனுபவம் என்ன? 1இராஜா 16:29-17:24; லூக் 4:25,26.**

தேசத்தில் பஞ்சம் உண்டாகுமென எலியா அறிவித்தார். யேசபேலின் சொந்த ஊரான சீதோனில் இருந்த சாறிபாத் எனும் இடத்திலிருந்து ஒரு விதவையின் வீட்டில் வைத்து எலியாவை தேவன் போஷிக்கிறார். ஆனால் அந்த விதவைக்கு எலியா வைத்த சோதனை கடுமையானது. அவளிடம் கடைசியாக கொஞ்சம் விறகும், எண்ணெயும், மாவும் இருந்தது. தனக்கு அப்பம் சுட்டுத் தரும்படியும், எதிர்காலத்தை தேவன் பார்த்துக்கொள்வார் என்றும் சொல்கிறார். அவள் காட்டிய விசுவாசம் இன்றும் பேசப்படுகிறது. இயேசுதாமே பின்னர் அவளைப் புகழ்ந்திருக்கிறார். லூக் 4:26. எண்ணெயும் மாவும் குறையவில்லை; அதனால் யெகோவை பற்றி அதிகமாக அறிந்துகொள்கிறாள். ஆனால் அவளுடைய ஒரே மகன் வியாதிப்பட்டு, மரிக்கிறான். உடனே, தன்னுடைய அக்கிரமத்தால் தன் மகன் இறந்ததுபோல வேதனையில் எலியாவிடம் பேசுகிறாள். 1இராஜா 17:18. அக்கிரமத்தைப் போக்க குழந்தையைப் பலியிடவேண்டும் என்பது அப்பகுதியின் நம்பிக்கை. அது இப்போது இஸ்ரவேலிலும் நுழைந்திருந்தது. எரே 19:5; மீகா 6:7.

**கேள்வி: தன் மகன் திரும்பக் கிடைத்தது அவளுடைய ஆவிக்குரிய அனுபவத்தில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது? 1இராஜா 17:24. அவளுடைய வார்த்தைகள் சொல்லும் பாடம் என்ன?**

தேவன் தம் வல்லமையால் உயிர்கொடுத்து, குடும்பத்தை மீண்டும் இணைக்கும்போது, அவரிலும் அவருடைய வார்த்தையிலும் விசுவாசம் உருவாகிறது. கொள்கைகளை ஆமோதிக்கலாம், ஆனால் ஆவிக்குரிய அனுபவம் வெதுவெதுப்பாக இருக்கும். தேவ வார்த்தையின் சத்தியங்களை தனிப்பட்ட விதத்தில் அனுபவித்து, குடும்ப உறவுகளில் மறுமலர்ச்சியும், சீர்திருத்தமும் ஏற்பட்டால், அது உள்ளத்தில் பலமான உணர்த்துதலை உண்டாக்கும்.

குடும்பத்தில் என்னென்ன விஷயங்கள் மீண்டும் சீரடைவதற்கு எதிர்பார்த்து இருக்கிறீர்கள்? அது சீரடையும் என்கிற நம்பிக்கையைத் தரக்கூடிய என்ன தேவ வாக்குறுதிகளை உறுதியாகப் பற்றிப் பிடித்திருக்கிறீர்கள்?

# பலிபீடத்தண்டையில் இருதயங்களைத் திருப்புதல்

**கேள்வி: கர்மேல் சம்பவம் எதை மையமாக வைத்து நடைபெறுகிறது? 1இராஜா 18:20-45. இந்தச் சம்பவத்தின் நியதிகள் எவ்வாறு நம் குடும்ப வாழ்க்கைக்குப் பொருந்தும்?**

இஸ்ரவேலர் தங்கள் பிதாக்களின் நம்பிக்கையைப் புறக்கணித்து, உடன்படிக்கையைப் புதுப்பித்தால் தங்கள்வாழ்க்கையையும், குடும்பங்களையும், தேசத்தையும் காப்பாற்றலாம். கர்மேல் மலைமேல் அதைத்தான் எலியா எதிர்பார்த்தார்.

அது அந்திப்பலியின் வேளை. பாகால் தீர்க்கதரிசிகளின் பலி அங்கீகரிக்கப்படவில்லை. இப்போது எலியாவின் தருணம். அவர் வேண்டுமென்றே அந்த வேளைக்காகக் காத்திருந்தார். ஆசரிப்புக்கூடாரத்தில் அந்த வேளையில் ஏறெடுக்கப்பட்ட பலியானது தேவனுடைய மீட்பின் திட்டத்தைச் சுட்டிக்காட்டியது. 1இராஜா 18:30. அதற்கு நேராக மக்களின் கவனத்தைத் திருப்ப முயன்றார். ‘‘என் கிட்டே வாருங்கள்’’ என்று அழைக்கிறார். அது பாவிகளுக்கு இரட்சகர் கொடுக்கிற அழைப்பை நினைவூட்டுகிறது. மத் 11:28. இஷ்டத்திற்குத் திரியும் பிள்ளைகளை நினைத்து வேதனைப்படும் பெற்றோர், சோரம்போன இஸ்ரவேலரை தேவன் நேசித்ததுபோல, அந்தப் பிள்ளையையும் நேசிக்கிறாரென நிச்சயம் அறியலாம். சோரம்போகிறவர்களை தம் பக்கம் திருப்புவதற்கு அவர் ஓயாமல் பிரயாசப்பட்டு வருகிறார்.

யெகோவாவின் பலிபீடத்தை எலியா செப்பனிட்டார். அது நம் குடும்பத்தில் இயேசுவையும் அவரது இரட்சிப்பின் கிரியையும் நாம் தியானிக்கிற வேளையான குடும்ப ஜெபத்தைச் சுட்டிக்காட்டுகிறது. தேவனிடம் ஜெபிக்கவும், அவரைக் குறித்துப் பேசவும், அவரது இலவச ஈவான இரட்சிப்பை ஒவ்வொரு நாளும் புதிதாகப் பெறவும், அவரது போதனைகளைத் தியானிக்க நம் இருதயங்களை அர்ப்பணிக்கவும் ஓர் அருமையான தருணமாக குடும்ப ஜெபம் இருக்கிறது.

தேவன் அவர்களை மீண்டும் ஏற்றுக்கொண்டார் என்பதைக் காண எலியா விரும்பினார். ‘தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு’ என்று ஜெபிக்கிறார். 1இராஜா 18:37. நாமாக நம் இருதயங்களை தேவனிடம் திருப்ப முடியாது; அவர் இலவசமாகக் காட்டுகிற அவருடைய கிருபைக்கு நாம் இணங்கமட்டுமே செய்யமுடியும்.

அக்கினி வந்து ஒன்றுவிடாமல் பட்சித்தது. பாவிகளை அல்ல, பலியை. ‘நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத’ இயேசு நமக்காகப் பலியானதை அது சுட்டிக்காட்டுகிறது. 2கொரி 5:21. மக்கள் தங்கள் பாவத்தை அறிக்கையிட்டு, தேவனைத் துதித்தார்கள். பாகால் தீர்க்கதரிசிகள் தேவ அழைப்புக்கு இணங்காததால், கொல்லப்பட்டார்கள். பிறகு மழை வந்து, பஞ்சம் நின்றது.

உங்கள் குடும்ப ‘பலிபீடம்’ என்ன நிலையில் உள்ளது? என்னென்ன வழிகளில் நீங்கள் மீண்டும் ‘பலிபீடத்தைச் செப்பனிடலாம்’?

# யோர்தானண்டையில் இருதயங்களைத் திருப்புதல்

யோவான் ஸ்நானன் பற்றி காபிரியேல் முன்னுரைத்தார். லூக் 1:17. அவன்தான் முன்னுரைக்கப்பட்ட எலியா என்று இயேசு சொன்னார். மத் 11:14; 17:12,13. ஆண்டவருக்காக வழியை ஆயத்தம்பண்ணவிருந்த 'தூதுவன்' என்று நற்செய்தி எழுத்தாளர்கள் குறிப்பிடுகிறார்கள். மத் 11:10; மாற்கு 1:2; லூக்கா 7:27; ஒப்பிடவும் மல்கியா 3:1.

**கேள்வி: யோவானின் செய்தி எவ்வாறு 'இருதயத்தைத் திருப்புகிற' செய்தியாக இருந்தது? மத் 3:2,8; 14:4; மாற்கு 1:4; லூக் 3:3,8,9,11,13,14.**

___

___

விதைவிதைக்கும்படி கடினமான நிலத்தை உழுது, பண்படுத்துகிற ஒரு விவசாயிபோல, பாவத்தைக் கண்டித்து, மனந்திரும்பும்படி பாவிகளை வலியுறுத்துகிறார் யோவான் ஸ்நானன். சுயஆராய்வு வேண்டும், உள்ளபடியான நிலையை உணரவேண்டம், இல்லையேல், திருந்த வேண்டுமென்கிற அவசியம் புரியாது. தேவனுடைய பரிசுத்த கட்டளைகளையும், அவருடைய பூரண நீதியைப் பெறவேண்டிய அவசியத்தையும் பற்றிய உணர்வை யோவானின் செய்தி மக்களில் உருவாக்கியது. மெய்யான மனந்திரும்புதலில் தாழ்மை காணப்படும், குணம் மாறும்படி தேவனிடம் உதவிகேட்கச்செய்யும். ஆபிரகாமை தங்கள் தகப்பனென்று சொன்னவர்கள் சுயநாட்டமும், குறுகியமனப்பான்மையும் பெற்றிருந்தார்கள். அவர்களை மாய்மாலக்காரர்கள் என்றார்; அவர்களுடைய பிதாக்களின் விசுவாசம் எப்படிப்பட்டதென எடுத்துச் சொன்னார்.

**கேள்வி: யோவானின் செய்தி எவ்வாறு இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்தியது? யோவான் 1:35-37; 3:27-30.**

___

___

இயேசுதான் தேவ ஆட்டுக்குட்டி என்று யோவானுக்குக் காட்டப்பட்டது. எனவே, அவரை தேவ ஆட்டுக்குட்டி என்று அறிமுகப்படுத்தி, மக்களை அவரை நோக்கி திருப்பினார். யோவான் 1:29,36. உடனே, யோவானின் சீடர்களான அந்திரேயாவும், அக்கால விவரங்களைப் பதிவுசெய்த நற்செய்தி எழுத்தாளரான யோவானும் யோவான் ஸ்நானனை விட்டுப்போய், இயேசுவின் சீடரானார்கள். 'மனந்திரும்புதல் அவசியம்' என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, பாவத்திலிருந்து இரட்சிப்பவரையும் எலியாவின் செய்தி அடையாளங்காட்டுகிறது. அவரைப் பற்றிய ஆர்வத்தைத் தூண்டுகிறது; அவரை அறிமுகப்படுத்துகிறது.

இன்று யோவான் ஸ்நானன் உங்களுடைய வீட்டிற்கு வந்தால், உங்களிடம் என்ன சொல்வார்?

___

**வியாழன்** ஜூன் 27

# கடைசி நாட்களில் இருதயங்களைத் திருப்புதல்

யோவான் ஸ்நானனின் ஊழியமே நம் ஊழியமென அட்வென்டிஸ்டுகள் சொல்கிறார்கள். அவர் இயேசுவின் முதலாம் வருகைக்கு வழியை ஆயத்தம்பண்ண, சீர்திருத்தத்தையும் மனந்திரும்புதலையும் வலியுறுத்தினார். இயேசுவின் இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தம்பண்ண ஓர் இயக்கமாக நாம் செயல்படுவதாக நம்புகிறோம்.

**கேள்வி: நம் செய்தி எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்? லூக் 1:17ஐ ஜெபத்துடன் வாசியுங்கள்.**

---

நம் பரலோக பிதா தம் பிள்ளைகளின் இருதயங்களை தம்மிடம் திருப்பியிருக்கிறார்; கிறிஸ்துவின் சிலுவையின்மூலம் அவர்களுடைய இருதயங்களை மற்றவர்களிடமும் திருப்பியிருக்கிறார். இந்த அற்புதமான செய்தியை குடும்பங்கள் நம்பவேண்டும். 2கொரி 5:18-21; எபே 2:11-18. பரிசுத்த ஆவியானவர் தங்களுக்குள் அன்பை ஊற்றும்படி அவருடைய கிருபையால் நிரப்பப்படவேண்டும். அதற்கான அழைப்பைத்தான் எலியாவின் செய்தி கொடுக்கிறது.

சுயநலமற்ற, அக்கறையுள்ள, நீடித்திருக்கிற ஓர் அர்ப்பணிப்பையும், தேவன்மேல் தடுமாற்றமற்ற நம்பிக்கையையும் இந்த உலகம் காணவேண்டும். தேவ கிருபையால் கிறிஸ்தவக் குடும்பங்கள் அதைச் செய்யலாம். இந்த உலகத்திற்கு நாம் அறிவிக்கவேண்டிய செய்தி முதலில் நமக்குத்தான் பொருந்தும். நற்செய்தியின், அன்பின், ஐக்கியத்தின், சுயதியாகத்தின் நியதிகள் முதலில் நம் மத்தியில், குறிப்பாக நம் சொந்தக் குடும்பங்களில் வெளிப்படவேண்டும். இல்லையேல், இந்தச் செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்கத் திறனற்றவர்களாகிவிடுவோம். திறமையான பிரசங்கங்களும், பகுத்தறிவான வேத விளக்கங்களும் மட்டும் போதா. நாம் பிரசங்கிக்கிற அர்ப்பணிப்பையும், அன்பையும், இருதயத் திரும்புதலையும், மனமாற்றத்தையும் நம் வாழ்வில், குறிப்பாக நம் குடும்ப வாழ்வில் உலகம் காணவேண்டும். வாழ்க்கையை மாற்றுகிற, அவர் பிரசங்கத்தை பயனுள்ளதாக்குகிற வல்லமையை யோவான் ஸ்நானன் பெற்றிருந்தார்; தேவ கிருபையால் நாமும் பெறலாம்; ஆனால் எவ்வளவு தூரம் கீழ்ப்படிய ஆயத்தமாக இருக்கிறோமோ அவ்வளவு தூரம்தான் செய்யமுடியும்.

இயேசுவின்மூலம் நாம் பரலோகக் குடும்பத்தின் அங்கத்தினர்கள். எபே 3:15. நாம் தேவனுடைய சாட்சிகளாக அழைக்கப்பட்டுள்ளோம். நற்செய்தியின் வல்லமை ஒரு குடும்பத்தில் எத்தகைய மாற்றத்தை உண்டாக்கமுடியும் என்பதை உலகத்திற்குக் காட்டவேண்டும்; அதைவிட நம் சாட்சியை வல்லமையாக்குவது எதுவுமில்லை.

ஒருவரை நீங்கள் நேசிப்பதையும், அவர்மேல் அக்கறையோடு இருப்பதையும் காட்டுவதற்கு நீங்கள் என்ன செய்யலாம்?

## மேலும் படிக்க:

“யோவான் சொன்ன அதே செய்தியை நாமும் சொல்லவேண்டும். அக்கிரமம்செய்த ராஜாக்களை யோவான் அதற்காகக் கடிந்துகொண்டார். தன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்ட நிலையிலும், சத்தியம் தன் உதடுகளைவிட்டுத் தப்புவதற்கு அவர் அனுமதிக்கவேஇல்லை. அதே உண்மையுடன் இக்காலத்திலும் நாம் நம்முடைடயை ஊழியப்பணியைச் செய்யலாம்.”

### கலந்துரையாடக் கேள்விகள்

1 எலியாவின் செய்தி உங்களுடைய சபைக்கும் எவ்வாறு பொருந்தும்? அந்தச் செய்தியையும் அதை அறிவிப்பதில் தன் பங்கையும் உங்கள் சபை புரிந்து கொள்ள நீங்கள் என்ன செய்யலாம்?

2 “இருதயங்கள் திருப்பப்பட்ட” அனுபவத்தை அடைந்தவர்கள் அதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். என்ன மாற்றம் உண்டானது? உங்கள் வாழ்க்கையிலும், உங்கள் குடும்பத்தினர் வாழ்க்கையிலும் அந்த மாற்றம் ஏற்படுத்தின தாக்கம் என்ன?

3 யோவான் ஸ்நானன் செய்த பணியே நம் பணி என்று நம்புகிறவர்களுக்கு என்ன நேரிடலாம்? இதற்கான பதில் திட்டவட்டமாகச் சொல்லும் செய்தி என்ன?

4 ஒரு குடும்பம் எப்படி இருக்கவேண்டுமென வேதாகமம் சொல்கிறது? ‘குடும்ப நியதிகளைக் கடைபிடிப்பதற்கான உறுதிமொழி’ என்று தலைப்பிட்டு, வகுப்பாகச் சேர்ந்து நியதிகளை எழுதுங்கள். எதை அளவுகோலாக வைத்து அந்த நியதிகளைத் தேர்வுசெய்வீர்கள்? அதற்கு இந்தக் காலாண்டில் நீங்கள் படித்த விஷயங்கள் எவ்வாறு உதவியாக இருக்கும்? உங்கள் பதிலைச் சபையில் பகிரலாம்.

5 தேவனைவிட்டு வழிவிலகிச் சென்றுள்ள பிள்ளைகளையுடைய பெற்றோர், என்னென்ன வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்ளலாம்?

# என்னுடைய மூன்று ஆசைகள்

**லூ ஷென் - சியாங்**

நான் ஞானஸ்நானம் பெற்று ஒரு வருடம் ஆகியிருந்தது. ஓய்வுநாளிலும் வேலை செய்ய வேண்டியிருந்ததால், டிரக் வண்டி ஓட்டுனர் வேலைக்கு விண்ணப்பித்தேன்.

நேர்முகத் தேர்வின்போது, மூன்று கோரிக்கைகளை வைத்தேன்: ஓய்வுநாளில் வேலைசெய்ய மாட்டேன், நிறுவனம் வழங்கும் சாப்பாட்டில் பன்றி இறைச்சி கூடாது, 50,000 தைவான் டாலர்கள் கடனாக வேண்டும்.

என் துணிவைப் பார்த்து முதலாளி அசந்துபோனார். ஆனால் அவர், "இன்றைக்கு வேலைக்குச் செல்லுங்கள், இதுபற்றி பிறகு பேசுவோம்" என்றார். நான் எப்படி வேலை செய்கிறேனெனப் பார்க்க விரும்பினார். வேலை முடிந்ததும் என்னை அழைத்தார்.

"சனிக்கிழமைக்கு பதிலாக ஞாயிற்றுக்கிழமையில் வேலைசெய்யலாம். ஆனால் பன்றி இறைச்சி சாப்பிடாததின் காரணம் என்ன?" என்று கேட்டார்.

"அது என்னுடைய மத நம்பிக்கை" என்று சொன்னேன்.

ஒரு கணம் யோசித்த முதலாளி, "சரி. எதற்காக 50,000 தைவான் டாலர்கள் கடன் ஏன்?" என்று கேட்டார்.

சமீபத்தில் ஏற்பட்டவிபத்து பற்றியும், மருத்துவச் செலவும், புதிய கார் வாங்கின செலவும்போக, என்னிடம் பணம் ஏதும் மீதியில்லாதது பற்றியும் சொன்னேன்.

"50,000 கடன்கொடுத்தால் எவ்வாறு திரும்பச் செலுத்துவீர்கள்? மாதம் 10,000 அல்லது 20,000 செலுத்துவீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை, மாதம் 1000 செலுத்துவேன்" என்றேன்.

முதலாளிக்கு ஒரே அதிர்ச்சி. மாதம் 1000 தைவான் டாலர் செலுத்தினால், கடனைச் செலுத்தி முடிக்க 4 வருடங்களுக்கு மேல் ஆகும். ஆனால் அவர் மனதில் யாரோ ஏவியிருக்க வேண்டும். 50,000 தைவான் டாலர் கடன்கொடுக்கத் தீர்மானித்தார். ஆறு மாதங்கள் கடந்தன. முதலாளி என்னை மீண்டும் அழைத்தார். "நீங்கள் நன்றாக வேலை செய்கிறீர்கள். உங்களுடைய கடனைத் தள்ளுபடி செய்கிறேன்" என்று சொன்னார்.

என்னால் நம்பவே முடியவில்லை. தேவனுக்காகப் பணிசெய்வது எவ்வளவு நல்லது!

நேரக்முகத்தேர்விற்குச் செல்லுமுன் 'தேவனே என்னுடைய மூன்று ஆசைகளும் நிறைவேற வேண்டும். தயவுசெய்து நீர் தலையிடும்' என்று ஜெபித்தேன். தேவன் என் ஜெபத்திற்குப் பதிலளித்தார். ஊழியப்பணி மகத்தானது.



**இன்றும் முழு நேர டிரக் ஓட்டுனராக வேலைசெய்கிறார் 60 வயது லூ ஷென்-சியாங். தைவானின் வல்லமையான சுயாதீன ஊழியர்.**